சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
சென்னை – 600 008.
(நிருவாகப் பிரிவு)

<u>அலுவலக ஆணை எண். 25/2010</u> நாள்: 24.11.2010

பொருள்: நிருவாகம் – சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் – அலுவலக நடைமுறை – பச்சை நிற மை (Green Ink) பயன்பாடு குறித்த தெளிவுரை வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

படிக்க: அரசு ஆணை (நிலை) எண்.151 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள்: 21.10.2010.

---

பார்வையில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அலுவலகத்தில் பச்சை நிற மை (Green Ink) பயன்பாடு குறித்து கீழ்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது:–

அ) அரசு அலுவலகங்களில் மை ஊற்று எழுதுகோல் (Fountain Pen), பந்துமுனை (Ball Point), / கூழ்மை (Gel), எழுதுகோலை பயன்படுத்தலாம். மேலும் நிலைத்த நீலம் (Permanent Blue), கருநீலம் (Blue Black), அல்லது கருப்பு வண்ண (Black) மையினை மட்டுமே அரசு ஆவணங்களில் எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

ஆ) "தொகுதி" "அ" அலுவலர்கள் (Group 'A' and above officers) மட்டுமே அரசு கோப்புகளில் சிறுகுறிப்புகள் எழுத பச்சை நிற மையினை (Green Ink) பயன்படுத்த வேண்டும்.

மேற்படி அறிவுரைகளை கோப்புகளை கையாளும்பொழுது கடைபிடிக்குமாறு பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்) தயானந்த் கட்டாரியா,
உறுப்பினர்–செயலர்

<u>பெறுநர்:</u>

அனைத்துப் பிரிவு மற்றும் துறைத் தலைவர்கள்,
(பணியாளர்கள் / அலுவலர்கள் இடையே சுற்றுக்காக).

<u>நகல்:</u>

துணை தலைவரின் தனிச் செயலர்
உறுப்பினர்–செயலரின் தனிச் செயலர்
முதன்மை செயல் அலுவலரின் தனி எழுத்தர்
தகவல் பலகை.

// உண்மை நகல் // உத்திரவின்படி // அனுப்பப்படுகிறது //

26/11/10
நிருவாக அதிகாரி (பொ)

வரு.26.11

26/XI/10

Verified @ RealEstate™